# RAF SECTOR

## NEWS CLIP

## 12/02/19

**TO SERVE HUMANITY WITH SENSITIVE POLICING**

**Daily Thanthi (Tamilnadu)**



மண்டபத்தில் கொடி அணிவகுப்பு நடந்த போது எடுத்த படம்.

# மண்டபத்தில் மத்திய அதிவிரைவு படையினர் கொடி அணிவகுப்பு

## முக்கிய வீதிகள் வழியாக சென்றனர்

பனைக்குளம், பிப்.9-

மண்டபத்தில் மத்திய அதிவிரைவு படையினரின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது. அப்போது முக்கிய வீதிகள் வழியாக வீரர்கள் சென்றனர்.

### கொடி அணிவகுப்பு

மாவட்டத்தில் பதட்டமான பகுதிகள் கண்டறியப்பட்டு அங்கு மத்திய அதிவிரைவு படை மூலம் கொடி அணிவகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இதையொட்டி கோவையில் இருந்து 40 பேர் கொண்ட மத்திய அதிவிரைவு படையினர் ராமநாதபுரம் மாவட்டத்துக்கு வந்துள்ளனர். இந்த நிலையில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஓம்பிரகாஷ் மீனா உத்தரவின் பேரில் மண்டபத்தில் நேற்று மத்திய அதிவிரைவு படையினரின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது. மண்டபம் போலீஸ் நிலையத்தில் இருந்து தொடங்கிய கொடி அணிவகுப்பை போலீஸ் துணை சூப்பிரண்டு மகேஷ் தொடங்கி வைத்தார்.

ஊர்வலம் மண்டபம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக ரெயில் நிலையம், கடற்கரைக்கு சென்று பின்னர் அதே வழியாக வந்து மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் முடிவடைந்தது. நிகழ்ச்சியில் மத்திய அதிவிரைவு படை துணை கமாண்டர் இளங்கோவன், மண்டபம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மாயராஜலட்சுமி, பாம்பன் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் சுதர்சனம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### ஆய்வு

இதுபற்றி துணை கமாண்டர் இளங்கோவன் கூறும் போது, கடந்த 4-ந்தேதி முதல் மாவட்டத்தில் முக்கிய இடங்களில் கொடி அணிவகுப்பு நடத்தி வருகிறோம். கமுதி, அபிராமத்தில் கொடி அணிவகுப்பு நடத்தப்பட்டது. அதைத்தொடர்ந்து தற்போது மண்டபத்திலும், ஆர்.எஸ். மங்கலத்தில் இன்று (சனிக்கிழமை) கொடி அணிவகுப்பு நடைபெற உள்ளது.

இதேபோல முக்கிய இடங்களுக்கும் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு வருகிறோம். குறிப்பாக ராமேசுவரம் கோவில், ரெயில் நிலையம், தனுஷ்கோடி ஆகிய இடங்களை பார்வையிட்டோம் என்று தெரிவித்தார். மண்டபத்தில் மத்திய அதிவிரைவு படையினரின் இந்த கொடி அணிவகுப்பை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்துச்சென்றனர். இந்த படையினர் வருகிற 12-ந்தேதி வரை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் இதுபோன்ற கொடி அணிவகுப்பு நடத்த உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**Dinamalar (Tamilnadu)**

# மத்திய அதிவிரைவு படை அணிவகுப்பு



கமுதி அருகே அபிராமத்தில் மத்திய அதிவிரைவு படையினர், போலீசாருடன் அணிவகுப்பில் ஈடுபட்டனர்.

சாயல்குடி, பிப். 8: கமுதியில் பதற்றமான பகுதிகளில் மத்திய அதிவிரைவு படையினர் உள்ளூர் போலீசாருடன் அணிவகுப்பு மற்றும் ஆய்வு பணிகளை செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி பகுதிகளில் அடிக்கடி சமூக மோதல்கள், குற்றச்சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வந்தன. இதனை தடுக்கும் நோக்குடன் கடந்த 5 ஆண்டுகளாக மத்திய அதிவிரைவு படையினர் அணிவகுப்பு நடத்தி வருகின்றனர். நேற்று கோவையில் இருந்து மத்திய அதிவிரைவு படை உதவி கமாண்டர் இளங்கோ தலைமையில் 50 பேர் கமுதிக்கு வந்தனர். அவர்கள் உள்ளூர் போலீசாருடன் சேர்ந்து கமுதியில் கண்ணீர் புகை வாகனம், கலவர தடுப்பு வாகனத்துடன் துப்பாக்கி ஏந்தி அணிவகுப்பு நடத்தினர். கமுதி பஸ் நிலையத்தில் துவங்கிய அணிவகுப்பு முக்கிய வீதிகள் வழியாக சிங்கம்புளியாபட்டியில் முடிந்தது.

இதுபோல் காவல் நிலையங்கள் உள்ள பெருநாழி, கோவிலாங்குளம், மண்டலமாணிக்கம், அபிராமம் பகுதியிலும் அணிவகுப்பு நடத்தப்பட்டது. மேலும் எம்பி தேர்தல் விரைவில் நடக்க இருக்கும் நிலையில், பதற்றமான பகுதிகள் எவை என அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து அதிவிரைவு படை உதவி கமாண்டர் இளங்கோ, கமுதி டிஎஸ்பி சண்முக சுந்தரம் கூறுகையில், "கமுதி பகுதியில் கலவர தடுப்பு முன்னெச்சரிக்கையாக அணிவகுப்பு நடத்தப்பட்டது. மக்கள் ஒன்றுபட்டு எவ்வித மோதலுடன் இல்லாமல் அமைதியாக வாழவேண்டும். தேர்தல் நேரங்களில் பதற்றம் இல்லாதவாறு அமைதியாக இப்பகுதி இருக்க வேண்டும். இதுகுறித்து மக்கள் அறிய வேண்டும் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்குடன் அணிவகுப்பு நடத்தப்பட்டது" என்றனர்.

சனிதோறும்
ஆன்மிக மலர்
படியுங்கள்

# Photos of Deployment/Fam-Ex Of RAF









**सी0आर0पी0एफ0 सदा अजेय, भारत माता की जय।**